FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8301692

1. District : Thiruvallur PS: VIDIC Year: 2026 FIR No.: 11/DC/2026/TVL Date: 02.07.26
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முத.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018. Sections பிரிவுகள்: 17.30
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்: 7(a), 12 & 10-7(a)
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 02.07.2026 Date to : 02.07.2026
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
8.930hrs 06.30hrs
Time Period : Time from : Time to :
நேர அளவு நேரம் முதல் 1.30hrs நேரம் வரை 06.30 hrs

(b) Information Received at PS. Date : 02.07.26 Time : 17.30 hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) 02.07.26 Time : 17.30 hrs
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : Typed.
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: 75 km North East
குற்ற நிகழ்விடம் அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : (b) Address : Transport Department, Modern Integrated
முறைக் காவல் எண் முகவரி Checkpost Pothikapuram @ Ekvoor Village (Incoming)

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : Tr. J. Vijay Anand (b) Father's/ Husband's Name : Tr. Jothilingam
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : 53yrs (d) Nationality : (e) Passport No. : —
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue : —
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : Deputy Tahsildhar (g) Address : Deputy Tahsildhar, Taluk Supply Office, Thiruvallur Tk & DT, (I/c) District Deputy Inspection cell Office, Thiruvallur DT.
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

(1) Tr. K. Sakthivel, M.V.I (11.7), Transport Department, Modern Integrated Check post Pothikapuram @ Ekvoor Village (Incoming) Thiruvallur District.
~~(2) Tr. E. Murugan, S/o Ekambaram, Plot No.85, Priyadharshini Nagar, 4th St, Thiruvallur~~
(2) Tr. A. Nagendran S/o Balu No. 78, Mannadi Theru, Periya Obalapuram, Cherukandi Tk, Thiruvallur DT.
(3) Tr. M. Lakshmanan S/o Munusamy Sthirtha Garden, Thanalalli post, Gummidipoondi Tk, Thiruvallur DT,

8. Reasons for delay in reporting by the complainant / informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

— NIL —.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary) —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) : —
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து அனுப்பப்படுகிறது :-

இன்று 09.07.2016 அன்று காலை 17.30 மணிக்கு S. மாலா,
காவல் ஆய்வாளர் அவர்கள் நான் நின்னை அழைத்து [illegible]
[illegible] ரோந்து சுற்றுப்பணியில், [illegible]
[illegible] அவர்கள் கொடுத்த உத்தரவின் பேரில், [illegible]
[illegible] மாட்டாட்சியர், பட்ட வகுப்பை [illegible]
2ம் மாவட்ட [illegible] அவர்கள் கொடுத்த புகார் மீது வழக்கு பதிவு செய்ய [illegible]

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதஅ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer-in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
S. Mala 09/07/2016

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
09.07.2016

Name: பெயர் S. Mala
Rank: நிலை Inspector of Police,
Uthiramerur, Thiruvallur.

(Content of the FIR in Thiruvallur V&AC Cr.No.11/AC/2026/TVL u/s 7(a), 12 r/w 7(a) of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 continuous....)

அனுப்புநர் திரு.விஜய் ஆனந்த், துணை வட்டாட்சியர், வட்ட வழங்கல் அலுவலர்,வட்ட வழங்கல் அலுவலகம், திருவள்ளூர் மாவட்டம், (பொறுப்பு) மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர் மாவட்டங்கள். பெறுநர் காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு, திருவள்ளூர். ந.க.எண்.13187/2026/அ3, நாள். 08.07.2026, பொருள்:- திடீர் கூட்டாய்வு- திருவள்ளூர் மாவட்ட ஆய்வுக்குழு மற்றும் - ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு - போக்குவரத்து துறை நவீன ஒருங்கிணைந்த உள் வருகை சோதனைச்சாவடி, பெத்திக்குப்பம் (இருப்பு) எளாவூர், திருவள்ளூர் திருவள்ளூர் மாவட்டம் - 08.07.2026-ந்தேதி திடீர் கூட்டாய்வு மேற்கொள்ளப்பட்டது- தொடர்பான நடவடிக்கை எடுக்கக்கோரி - கடிதம் - அளித்தல் சம்மந்தமாக. பார்வை:- திடீர் கூட்டுத்தணிக்கை செயல்முறைகள், நாள்-08.07.2026 திருவள்ளூர் மாவட்டம், போக்குவரத்து துறை நவீன ஒருங்கிணைந்த உள் வருகை சோதனைச்சாவடி, பெத்திக்குப்பம் (இருப்பு) எளாவூரில் இயங்கி வரும் அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்வாளர் மற்றும் பணியாளர்கள், வாகன ஓட்டுநர்கள் மற்றும் உரிமையாளர்களிடமிருந்து வாகனங்களை அனுமதிப்பதற்காக லஞ்சமாக பணம் பெறுவதாக கிடைத்த இரகசிய தகவலை தொடர்ந்து, மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர் மாவட்டங்கள் அவர்களுக்கு கிடைத்த நம்பகமான ரகசிய தகவலின் அடிப்படையில், கூட்டு தணிக்கை மேற்கொள்வதற்காக ந.க.எண்.100/2026/L1. நாள்.07.07.2026 அனுப்பிய கடித்தத்தின்படி திருவள்ளூர் மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.13187/2026/அ3, நாள்.07.07.2026-ன்படி கூட்டு தணிக்கை ஆய்வு மேற்கொள்வதற்காக திரு.விஜய் ஆனந்த், வயது-53, த/பெ.ஜோதிலிங்கம், துணை வட்டாட்சியர், வட்ட வழங்கல் அலுவலர், வட்ட வழங்கல் அலுவலகம், திருவள்ளூர் மாவட்டம் ஆகிய என்னை கூட்டு தணிக்கை செய்ய நியமனம் செய்து உத்தரவு கொடுக்கப்பட்டதின்பேரில், இன்று 08.07.2026-ந்தேதி மேற்படி அலுவலகத்தில், நான் மற்றும் திருவள்ளூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.எஸ்.மாலா,

(Content of the FIR in Thiruvallur V&AC Cr.No.11/AC/2026/TVL u/s 7(a), 12 r/w 7(a) of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 continuous...)

காஞ்சிபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர், திரு.தேவநாரயணயன் மற்றும் குழுவினர்கள் இணைந்து, இன்று 08.07.2026-ந்தேதி அதிகாலை சுமார் 02.30 மணியளவில் இரு துறை திடீர் கூட்டாய்வு மேற்கொள்ளப்பட்டது. அப்போது உள்வருகை சோதனை சாவடியில் பணியில் 1)திரு.K.சக்திவேல், மோட்டார் வாகன ஆய்வாளர் (தொழில்நுட்பம் அல்லாத) 2)திரு.N.ஆடலரசன், அலுவலக உதவியாளர், 3)திரு.E.முருகன், (தனிநபர்), 4)திரு.B.மகேந்திரன், (தனிநபர்), 5)திரு.M.லட்சுமணன், (தனிநபர்) ஆகியோர்கள் பணியிலிருந்தனர். மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.K.சக்திவேல் அவர்கள் வாகனங்களை தணிக்கை செய்துக்கொண்டிருந்த இடத்திற்கு அருகில் இருந்த டிவைடர் சிண்ட் சுவர் மீது பேப்பருக்கு அடியில் கணக்கில் வராத பணம் ரூ.1,800/- இருந்தது. மேலும், அருகில் இருந்த வாகன சோதனை பூத் எண்-8-ன் உள்ளே மோட்டார் வாகன ஆய்வாளர் முன்னிலையில் சோதனை செய்தபோது அதில் கணக்கில் வராத பணம் ரூ.1,03,520/- இருந்தது. மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களுடன் வாகன சோதனையில் ஈடுப்பட்டுகொண்டிருந்த திரு.மகேந்திரன், தனிநபர் அவர்களிடமிருந்து பணம் ரூ.1.000/- மற்றும் திரு.லட்சுமணன் அவர்களிடமிருந்து பணம் ரூ.5,760/- கைப்பற்றப்பட்டது. திடீர் ஆய்வின்போது மொத்தம் பணம் ரூ.1,12,080/-யை கணக்கில் வராத சோதனை சாவடியை கடந்து செல்லும் வாகன ஓட்டிகளிடம் வசூல் செய்யப்பட்ட பணம் என தெரியவந்ததால் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் சோதனையின்போது கைப்பற்றப்பட்ட பணம் ரூ.1,12,080/- (177 x Rs.500, 40 x Rs.200, 128 x Rs.100, 50 x Rs.50, 10 x Rs.20, 8 x Rs.10)-ஐ நடவடிக்கை மேற்கொள்ள தங்களிடம் ஒப்படைக்கிறேன். திரு.விஜய் ஆனந்த், துணை வட்டாட்சியர்,வட்ட வழங்கல் அலுவலர்,வட்ட வழங்கல் அலுவலகம், திருவள்ளூர் மாவட்டம், (பொறுப்பு) மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர் மாவட்டங்கள். இணைப்பு -(1)திருவள்ளூர் மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண.13187/2026/அ3, நாள்.07.07.2026, நகல். (2)செயல்முறைஆணை அசல்.(3)சோதனையின்போது கைப்பற்றப்பட்ட பணம் ரூ.1,12,080/- (ஒரு லட்சத்து பண்ணிரெண்டாயிரத்து எண்பது ரூபாய்) (4)மாவட்ட துணை ஆய்வுக்குழு

(Content of the FIR in Thiruvallur V&AC Cr.No.11/AC/2026/TVL u/s 7(a), 12 r/w 7(a) of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 continuous...)

அலுவலரால் பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்கள் - 5 மற்றும் (5)அலுவலகத்தின் பதிவேடுகள் மற்றும் ஆவணங்களின் சான்றொப்பமிட்ட நகல்கள். அதில் திருவள்ளூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவின் காவல் துணை கண்காணிப்பாளர் திரு.கு.ஜெயக்குமார் அவர்களால் வழக்கு பதிவு செய்ய எனக்கு உத்தரவிடப்பட்டு கையொப்பம் செய்யப்பட்டுள்ளது. மேலும் திருவள்ளூர் மாவட்டம், போக்குவரத்து துறை நவீன ஒருங்கிணைந்த உள் வருகை சோதனைச்சாவடி, பெத்திக்குப்பம் (இருப்பு) எளாவூரில் இயங்கி வரும் அலுவலகத்தில் திடீர் கூட்டுத்தணிக்கையின் போது தயார் செய்யப்பட்ட செயல்முறையின் விபரம் பின்வருமாறு, முன்னிலை:- திரு.விஜய் ஆனந்த்,நாள்:-08.07.2026. பொருள்:- திடீர் கூட்டாய்வு- திருவள்ளூர் மாவட்ட துணை ஆய்வுக்குழு மற்றும் - ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு - போக்குவரத்து துறை நவீன ஒருங்கிணைந்த உள் வருகை சோதனைச்சாவடி, பெத்திக்குப்பம் (இருப்பு) எளாவூர், திருவள்ளூர் மாவட்டம் - 08.07.2026-ந்தேதி திடீர் கூட்டாய்வு மேற்கொள்ளப்பட்டது - தொடர்பான- செயல்முறைகள். ஆணை:- திருவள்ளூர் மாவட்டம், போக்குவரத்து துறை நவீன ஒருங்கிணைந்த உள் வருகை சோதனைச்சாவடி, பெத்திக்குப்பம் (இருப்பு) எளாவூரில் இயங்கி வரும் அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்வாளர் மற்றும் பணியாளர்கள், வாகன ஓட்டுநர்கள் மற்றும் உரிமையாளர்களிடமிருந்து வாகனங்களை அனுமதிப்பதற்காக லஞ்சமாக பணம் பெறுவதாக கிடைத்த இரகசிய தகவலை தொடர்ந்து, மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர் மாவட்டங்கள் அவர்களுக்கு கிடைத்த நம்பகமான ரகசிய தகவலின் அடிப்படையில், கூட்டு தணிக்கை மேற்கொள்வதற்காக ந.க.எண்.100/2026/L1. நாள்.07.07.2026 அனுப்பிய கடித்தத்தின்படி திருவள்ளூர் மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.13187/2026/அ3, நாள்.07.07.2026-ன்படி கூட்டு தணிக்கை ஆய்வு மேற்கொள்வதற்காக திரு.விஜய் ஆனந்த், வயது-53, த/பெ.ஜோதிலிங்கம், துணை வட்டாட்சியர், வட்ட வழங்கல் அலுவலர், வட்ட வழங்கல் அலுவலகம், திருவள்ளூர் மாவட்டம் ஆகிய என்னை கூட்டு தணிக்கை செய்ய நியமனம் செய்து உத்தரவு கொடுக்கப்பட்டதின்பேரில், இன்று 08.07.2026-ந்தேதி மேற்படி அலுவலகத்தில், நான் மற்றும்

(Content of the FIR in Thiruvallur V&AC Cr.No.11/AC/2026/TVL u/s 7(a), 12 r/w 7(a) of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 continuous...)

திருவள்ளூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.எஸ்.மாலா, காஞ்சிபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர், திரு.தேவநாரயணயன் மற்றும் குழுவினர்கள் இணைந்து இரு துறை திடீர் கூட்டாய்வு மேற்கொள்ளப்பட்டது. இன்று 08.07.2026-ந்தேதி அதிகாலை சுமார் 02.30 மணியளவில் என் தலைமையில் திருவள்ளூர் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவுகாவல் ஆய்வாளர் திருமதி.எஸ்.மாலா, காஞ்சிபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர், திரு.தேவநாரயணயன் மற்றும் காவல் ஆளிநர்கள் சகிதம், போக்குவரத்து துறை நவீன ஒருங்கிணைந்த உள் வருகை சோதனைச்சாவடி, பெத்திக்குப்பம் (இருப்பு) எளாவூர் அலுவலகத்தில் திடீர் கூட்டாய்வு மேற்கொள்ளப்பட்டது. அப்போது உள்வருகை சோதனை சாவடியில் பணியில் இருந்தவர்கள் விவரம் பின்வருமாறு:- 1)திரு.K.சக்திவேல், வயது-48, த/பெ.காளியண்ணன், எண்.12/60B, காளிப்பாளையம், வடக்கரை ஆத்தூர் போஸ்ட், நாமக்கல் மாவட்டம் மோட்டார் வாகன ஆய்வாளர் (தொழில்நுட்பம் அல்லாத) 2)திரு.N.ஆடலரசன், வயது-47, த/பெ.நெடுஞ்செழியன், எண்.89/3, சாமி சகஜானந்தா தெரு, திருவேட்கலம் அண்ணாமலை நகர், சிதம்பரம், கடலூர் மாவட்டம், அலுவலக உதவியாளர், 3)திரு.E.முருகன், வயது-46, த/பெ.ஏழுமலை, மனை எண்.85, அண்ணாமலை நகர், 4வது தெரு, திருவெற்றியூர், சென்னை-19 (தனிநபர்), 4)திரு.B.மகேந்திரன், வயது-46, த/பெ.பாலு, எண்.78, மண்ணடி தெரு, பெரிய ஓபாளபுரம், கும்மிடிப்பூண்டி தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம் (தனிநபர்), 5)திரு.M.லட்சுமணன், வயது-47, த/பெ,முனுசாமி, ஆதித்யா கார்டன், தேரவள்ளி போஸ்ட், கும்மிடிப்பூண்டி தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம் (தனிநபர்) ஆகியோர்கள் பணியிலிருந்தனர். நான் என்னையும் குழுவினரையும் அவர்களிடம் அறிமுகப்படுத்திக்கொண்டு, சோதனை மேற்க்கொள்ள ஒத்துழைப்பு தருமாறு கேட்டுகொண்டேன். மேற்படி சோதனை சாவடியில் திரு.K.சக்திவேல், மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்கள் பணியில் இருந்தார். அவரை விசாரித்தபோது, அவர் கடந்த 09.03.2026 முதல் பெத்திக்குப்பம் வாகன சோதனை சாவடியில் சுழற்சி முறையில் பணிபுரிவதாகவும், இதற்கு முன்னர் அரக்கோணம் Unit

(Content of the FIR in Thiruvallur V&AC Cr.No.11/AC/2026/TVL u/s 7(a), 12 r/w 7(a) of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 continuous...)

அலுவலகத்தில் கண்காணிப்பாளராக பணிபுரிந்ததாகவும், அப்போது மோட்டார் வாகன ஆய்வாளராக (தொழில்நுட்பம் அல்லாத) பதிவு உயர்வு பெற்று சோதனை சாவடியில் பணி நியமிக்கப்பட்டதாகவும், 07.07.2026 ஆம் தேதி இரவு 8.00 மணிமுதல் பணியில் இருந்து வருவதாகவும், தனக்கு உதவியாக அலுவலக உதவியாளர் திரு.ஆடலரசன் என்பவரும் தனிநபர்கள் 1)திரு.முருகன், 2)திரு.லட்சுமணன், 3)திரு.மகேந்திரன் ஆகியோர்கள் உள்ளனர் என்றும் தெரிவித்தார். மோட்டார் வாகன ஆய்வாளரை காவலர் மூலம் திரேக சோதனை செய்தபோது, அவரிடம் ரூ.2,500/- இருந்தது, அதுபற்றி அவரிடம் கேட்ட போது, இன்று மாலை தான் பணிக்கு வந்தபோது தான் கை செலவிற்காக பணம் ரூ.2,500/- கொண்டு வந்ததாகவும், அதனை பண கையிருப்பு புத்தகத்தில் பதிவு செய்துள்ளதாகவும் கூறியதால், அதனை சரிபார்த்து அந்த பணம் ரூ.2,500/- அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. அவர்கள் வாகனங்களை தணிக்கை செய்துக்கொண்டிருந்த இடத்திற்கு அருகில் இருந்த டிவைடர் சிண்ட் சுவர் மீது பேப்பருக்கு அடியில் கணக்கில் வராத பணம் ரூ.1,800/- இருந்தது. மேலும், அருகில் இருந்த வாகன சோதனை பூத் எண்-8-ன் உள்ளே மோட்டார் வாகன ஆய்வாளர் முன்னிலையில் சோதனை செய்தபோது அதில் கணக்கில் வராத பணம் ரூ.1,03,520/- இருந்தது. அது குறித்து மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களிடம் விளக்கம் கேட்ட போது, சோதனை சாவடி வழியாக செல்லும் வாகனங்களின் ஓட்டுநர்கள் அவர்களாகவே பணம் கொடுப்பது வழக்கம் என்றும், அதுபோன்று வாகன ஓட்டிகள் கொடுத்த பணம் தான் என தெரிவித்தார் எனவே மேற்படி பணம் ரூ.1,800/- மற்றும் ரூ.1,03,520/- வழக்கு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அலுவலக உதவியாளர் திரு.ஆடலரசன் அவர்களை காவலர் மூலம் திரேக பரிசோதனை செய்தபோது அவரிடம் பணம் ரூ.350/- இருந்தது, அது குறித்து கேட்டபோது தான் பணிக்கு வந்தபோது வீட்டிலிருந்து செலவிற்காக கொண்டு வந்ததாகவும், அதனை பண பதிவேடு புத்தகத்தில் பதிவு செய்துள்ளதாகவும் தெரிவித்தார். அவர் தெரிவித்த விபரங்கள் சரிபார்த்து ரூ.350/- திருப்பி அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. பூத் எண்-1-ல் பணியில் இருந்தவரை பற்றி விசாரிக்க, அவரது பெயர் முருகன் என்றும், மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களின் உத்தரவின் பெயரில் வாகனங்களுக்கு Temporary Permit ரசீது போட்டு கொடுப்பதாகவும்,

(Content of the FIR in Thiruvallur V&AC Cr.No.11/AC/2026/TVL u/s 7(a), 12 r/w 7(a) of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 continuous...)

07.07.2026 ஆம்தேதி இரவு 8.00 மணிமுதல் 19 Temporary Permit போடப்பட்டுள்ளதாகவும், அதற்காக ரூ.56,832/- வசூலிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். அவர் அமர்ந்திருந்த மேஜை டிராயரில் இருந்த பணத்தினை எடுத்து எண்ணிப்பார்க்க வசூலிக்கப்பட்ட பணம் சரியாக இருந்தது. எனவே, அதனை முறைப்படி அரசு கணக்கில் செலுத்துவதற்காக மோட்டார் வாகன ஆய்வாளரிடம் ஒப்படைக்கப்பட்டது. மேலும் திரு.முருகன் அவர்களை காவலர் மூலம் திரேக சோதனை செய்தபோது, அவரிடம் பணம் ரூ.170/-இருந்தது, அது குறித்து கேட்டபோது தான் பணிக்கு வந்தபோது வீட்டிலிருந்து செலவிற்காக கொண்டு வந்ததாக தெரிவித்தார். அதனால் அந்த பணம் ரூ.170/-யை அவரிடமேனே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. பின்னர், அருகில் இருந்த ஒரு அட்டையில் வைக்கப்பட்டிருந்த பணம் குறித்து கேட்டபோது, அது காலை பணியில் இருந்த மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களால் Temporary Permit போடப்பட்டு வசூலிக்கப்பட்ட பணம் என்றும், அதில் ரூ.1.30,382/- உள்ளதாக தெரிவித்தார். அதனை எண்ணி பார்க்க தொகை சரியாக இருந்தது. அதற்கான Print Out எடுக்கப்பட்டு சரிபார்த்து, அந்த தொகையை அரசு கணக்கில் செலுத்த மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. மோட்டார் வாகன ஆய்வாளருடன் பணியில் இருந்த தனிநபரான திரு.மகேந்திரன் அவர்களை காவலர் மூலம் திரேக பரிசோதனை செய்தபோது அவரிடம் பணம் ரூ.1,000/- இருந்தது. அப்பணம் குறித்து விசாரித்தபோது, சரியான விளக்கம் அளிக்காததால் அந்த பணம் வாகன ஓட்டுநகர்கள் மற்றும் வாகன உரிமையாளர்களிடமிருந்து லஞ்சமாக பெற்ற பணம் என கருதி பணத்தை கைப்பற்றப்பட்டது. மேலும், திரு.லட்சுமணன் அவர்களை காவலர் மூலம் திரேக பரிசோதனை செய்தபோது அவரிடம் பணம் ரூ.5,760/- இருந்தது, அப்பணம் குறித்து விசாரித்தபோது, அந்த பணம் வாகன ஓட்டுநர்களிடம் வசூல் செய்த பணம் என தெரிவித்தார் எனவே வழக்கு விசாரணைக்காக அந்த பணம் கைப்பற்றப்பட்டது. மேற்படி திரு.மகேந்திரன் மற்றும் திரு.லட்சுமணன் ஆகிய இருவரையும் விசாரணை செய்தபோது,

(Content of the FIR in Thiruvallur V&AC Cr.No.11/AC/2026/TVL u/s 7(a), 12 r/w 7(a) of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 continuous...)

நாங்கள் மோட்டார் வாகன ஆய்வாளரின் உத்தரவின்படி அவருக்கு உதவியாக வாகனங்களின் மீது வழக்கு பதிவு செய்ய உதவியாக வேலைகளை செய்து தருவதாகவும், அதற்கு தினமும் கூலியாக ரூ.600/- கொடுப்பதாகவும் தெரிவித்தார்கள். பின்பு மோட்டார் வாகன ஆய்வாளர் உட்பட மேற்கண்ட அனைவரிடமும் விசாரித்து வாக்குமூலம் பெறப்பட்டது. மேற்படி உள் சோதனைச்சாவடியில் கணக்கில் வராத பணம் மொத்தம் ரூ.1,12,080/-யை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் மேற்படி சோதனையின்போது ஆஜரிலிருந்த மோட்டார் வாகன ஆய்வாளர், அலுவலக உதவியாளர் மற்றும் தனிநபர்களின் வாக்குமூலங்களை பதிவு செய்யப்பட்டது. மேலும், போக்குவரத்து துறை நவீன ஒருங்கிணைந்த உள் வருகை சோதனைச்சாவடி, பெத்திக்குப்பம் (இருப்பு) எளாவூர் அலுவலகத்தில் பராமரிக்கப்படும் 1)பணியாளர்கள் வருகைப் பதிவேடு ஜீலை/2026, 2)பணியாளர்களின் பணி பார்ப்பு பதிவேடு ஜீலை/2026, 3)பணியாளர்கள் சொந்த பணம் கையிருப்பு பதிவேடு, 4) Temporary Permit வழங்கி வசூல் செய்யப்படும் தொகை வங்கியில் செலுத்தப்படுவது தொடர்பான விவர பதிவேடு பக்கம் எண்.98, நாள்.07.07.2015 ஆகியவை நகல் எடுத்து உண்மை நகல் என்று மோட்டார் வாகன ஆய்வாளரிடம் சான்றொப்பம் பெற்று வழக்கு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. 5)07.07.2026 ஆம்தேதி காலை 8.00 மணிமுதல் இரவு 8.00 மணிவரை Temporary Permit receipt போடப்பட்டதற்கான print out மற்றும் 6)இரவு 8.00 முதல் 08.07.2026 ஆம்தேதி அதிகாலை பூத் எண்-1-ல் சோதனை செய்த நேரம் வரைக்கான print out வழக்கு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேற்படி கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் அனைத்திலும் நான் மற்றும் திருவள்ளூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.எஸ்.மாலா, காஞ்சிபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர், திரு.தேவநாரயணயன் ஆகியோர்கள் கையெப்பம் செய்தோம். மேற்படி திடீர் சோதனை தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் இன்று 08.07.2026-ந்தேதி அதிகாலை 02.30 மணிக்கு துவங்கி காலை 06.30 மணிக்கு முடிக்கப்பட்டது. அதில் 1) திருமதி.S.மாலா,காவல் ஆய்வாளர்,ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பப் பிரிவு, திருவள்ளூர். 2) திரு.V.தேவநாராயணன்,காவல் ஆய்வாளர்,ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு,காஞ்சிபுரம்.

(Content of the FIR in Thiruvallur V&AC Cr.No.11/AC/2026/TVL u/s 7(a), 12 r/w 7(a) of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 continuous...)

3) திரு.K.சக்திவேல், போக்குவரத்து துறை நவீன ஒருங்கிணைந்த உள் வருகை சோதனைச்சாவடி, பெத்திக்குப்பம் (இருப்பு) எளாவூர்.திருவள்ளூர் மாவட்டம். 4) திரு.N.ஆடலரசன்,அலுவலக உதவியாளர்,போக்குவரத்து துறை நவீன ஒருங்கிணைந்த உள் வருகை சோதனைச்சாவடி, பெத்திக்குப்பம் (இருப்பு) எளாவூர்.திருவள்ளூர் மாவட்டம். 5) திரு.E.முருகன், வயது-46, த/பெ.ஏழுமலை, மனை எண்.85, அண்ணாமலை நகர், 4வது தெரு, திருவெற்றியூர், சென்னை-19 (தனிநபர்),6) திரு.B.மகேந்திரன், வயது-46, த/பெ.பாலு, எண்.78, மண்ணடி தெரு, பெரிய ஓபாளபுரம், கும்மிடிப்பூண்டி தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம். (தனிநபர்),7) திரு.M.லட்சுமணன், வயது-47, த/பெ.முனுசாமி, ஆதித்யா கார்டன், தேரவள்ளி போஸ்ட், கும்மிடிப்பூண்டி தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம் (தனிநபர்) மற்றும் திரு.விஜய் ஆனந்த், துணை வட்டாட்சியர்,வட்ட வழங்கல் அலுவலர்,வட்ட வழங்கல் அலுவலகம், திருவள்ளூர் மாவட்டம், (பொறுப்பு) மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர் மாவட்டங்கள் ஆகியோர்கள் கையொப்பம் செய்துள்ளார்கள்.

Honoured Madam,

I received the complaint and Registered a case in Thiruvallur V&AC Cr.No.11/AC/2026/TVL u/s 7(a), 12 r/w 7(a) of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 on 08.07.2026 at about 17.30hrs.

The original FIR, Complaint along with the Joint Surprise check proceedings of Deputy Tahsildhar, Taluk Supply Office, Thiruvallur Tk&Dt., (I/c) District Deputy Inspection Cell officer, Thiruvallur District, seized un-explained and unaccounted an amount of Rs.1,12,080/- and other enclosed documents are submitted before the Hon'ble Principal District and Sessions Judge, Thiruvallur and other copies are forwarded to Superior Officers.

S. Ilaku
08/7/2026

Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Thiruvallur.